**தேதி :** 27.10.2025 **CC.No. :** 172/2021 PW :1 பொட்டுத்தாய்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனது கணவருடன் பிறந்தவர்கள் 2 ஆண்களும், 2 பெண்களும் ஆவார்கள். என்னுடைய மாமனார் பெயர் திருமலை. அவர் உயிருடன் இல்லை. அவர் உயிருடன் இருந்தபோதே என்னுடைய கணவருக்கு ஒரு வீடும், எதிரி வகையறாவுக்கு ஒரு வீடும் கட்டி கொடுத்தார் என்றால் சரிதான். ஏற்கனவே, மொத்த இடத்தில் எதிரியின் குடிசை வீட்டிற்கு தென்புறம் எங்களுடைய குடிசை வீடு இருந்தது. அந்த இடத்தை பொறுத்து பாகப்பிரிவினை செய்யவில்லை. வீடு மட்டும் கட்டி அனுபவம் செய்து வரப்படுகிறது. இதனைப் பொறுத்து எங்களுக்கும், எதிரிக்கும் பிரச்சனை இருந்து வருகிறது. ஏற்கனவே, எங்களுக்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்து எங்கள் மீது குற்ற எண்.143/2013 மற்றும் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இதே சம்பவத்தில் நானும், என்னுடைய கணவரும், மகன், மகள் ஆகியோர்கள் 1, 3 எதிரிகளை தாக்கியதாக சி.சி.எண்.32/2022 என்ற ஒரு வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்கு. சம்பவயிடத்தில் நல்லி உள்ளது. சம்பவயிடம் எங்கள் வீட்டின் அருகில் உள்ளது. சம்பவயிடத்தை சுற்றிலும் செல்வராஜ், கருப்பசாமி, கருப்பன் ஆகியோர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் யாரும் விலக்கு பிடிக்க வரவில்லை. பரமசிவன் மனைவி சொர்ணம் எனது கணவரின் சகோதரி. அவர்கள் வீடு எங்கள் வீட்டிற்கு கிழக்கே உள்ளது. 5 நிமிடத்தில் செல்லலாம். அவர்

சம்பவயிடத்திற்கு வேலைக்கு வந்தார். இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகள் தாக்கியதனால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் எவ்வளவு மணி நேரம் நடந்தது என்றால் 10 நிமிடம் நடந்தது. நான் சம்பவத்தை குறித்து புகார் கொடுத்தேன். கையெழுத்து போட்டு கொடுத்தேன். போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் மெமோ தந்தார்களா? என்றால் தந்தார்கள். 1வது எதிரி குடித்து விட்டு வந்து பிரச்சனை செய்வதாக போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன். எதிரி குமார், பொன்னுத்தாய் ஆகியோர்கள் வலது கை மற்றும் பிட்டியில் கம்பால் அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரி குமார் தூக்கி எறிந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 3 எதிரிகளும் என்னுடைய கணவரின் வலது கை நடுவிரலில் கம்பால் அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிகள் அசிங்கமாக பேசியதாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரிகள் எங்களை அடித்து காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் 1,3 எதிரிகளை அசிங்கமாக பேசி, தாக்கினோம் என்றாலும், அந்த சண்டையில் நாங்கள் தடுமாறி விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும், எதிரிகள் தாக்கியதாக பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:09:52 +0530

**தேதி :** 27.10.2025 **CC.No. :** 172/2021 PW :2 **வேலு**

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனது உடன் பிறந்தவர்கள் 2 ஆண்களும், 2 பெண்களும் ஆவார்கள். என்னுடைய அப்பா பெயர் திருமலை. அவர் உயிருடன் இல்லை. அவர் உயிருடன் இருந்தபோதே எனக்கும் ஒரு வீடும், எதிரி வகையறாவுக்கு ஒரு வீடும் கட்டி கொடுத்தார் என்றால் சரிதான். ஏற்கனவே, மொத்த இடத்தில் வடபுறம் எதிரியின் குடிசை வீடும், தென்புறம் எங்களுடைய குடிசை வீடும் இருந்தது. இதனைப் பொறுத்து எங்களுக்கும், எதிரிக்கும் பிரச்சனை இருந்து வருகிறது. ஏற்கனவே, எங்களுக்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்து எங்கள் மீது குற்ற எண்.143/2013 மற்றும் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நல்லி எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ளது. சம்பவயிடத்தை சுற்றிலும் செல்வராஜ், கருப்பசாமி, கருப்பன் ஆகியோர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் யாரும் விலக்கு பிடிக்க வரவில்லை. பரமசிவன் மனைவி சொர்ணம் எனது சகோதரி. அவர்கள் வீடு எங்கள் வீட்டிற்கு அருகே இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகள் தாக்கியதனால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் எவ்வளவு மணி நேரம் நடந்தது என்றால் 10, 20 நிமிடம் நடந்தது. மருத்துவரிடம் நானும், எனது மனைவியும் வந்ததாக கூறியுள்ளேன். முதல்விசாரணையில் எதிரி பொன்னுத்தாய் கம்பு வைத்து என்னுடைய இடது கையில் அடித்து எனது இடது நடுவிரல் காயம் ஆனதாக போலீசார் விசாரணையில்

சொல்லியுள்ளேன். எதிரிகள் அசிங்கமாக பேசியதாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரிகள் எங்களை அடித்து காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும் 1,3 எதிரிகளை அசிங்கமாக பேசி, தாக்கினோம் என்றாலும், அந்த சண்டையில் நாங்கள் தடுமாறி விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும், எதிரிகள் தாக்கியதாக பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J
CHRISTAL BABITHA
Date: 2025.10.29
17:10:00 +0530